சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.110/2011

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28–ம் நாள் வாதி (பிரதிவாதி) சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – முகமதுஉசேன் (Pw3) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது நல்லூர் முகைதீன் ஆண்டவர் சும்மா பள்ளிவாசலில் நிர்வாக குழு உறுப்பினராக பணிபுரிந்து வருகிறேன். நான் நிர்வாக குழு உறுப்பினராக பணிபுரிகிறேன். தலைவர் சார்பாக நான் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். ( பிரதிவாதி தரப்பில் தலைவருக்கு அழைப்பாணை அனுப்பி அவர் வராததால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.) எங்கள் பள்ளி வாசலில் திருமணங்களை பதிவு செய்வோமா என்றால் பதிவு செய்வோம். எங்கள் பள்ளி வாசலில் 26.03.2001 அன்று அப்துல்லா மற்றும் பாத்திமா பீவிக்கு இடையே நடந்த திருமணத்தை பதிவு செய்துள்ளோம். அந்த திருமண பதிவு சான்றிதழை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ 3**. திருமண பதிவின் போது மணமகன் மற்றும் மணமகளின் தந்தையிடம் கையெழுத்து வாங்குவோம் என்றால் சரிதான். சா.சா.ஆ 3 ல் மணமகனின் தந்தை அப்துல்ரசாக் என்பவரிடம் கையெழுத்து வாங்கியுள்ளோம். அது போல் மணமகன், மணமகளிடம் கையெழுத்து வாங்கியுள்ளோம். அப்துல்ரசாக் எங்கள் நிர்வாக குழுவில் உறுப்பினராக இருந்துள்ளார் என்றால்

சரிதான். எங்கள் பள்ளி வாசலில் தீர்மானங்கள் நிறைவேறும் போது நிர்வாக குழு உறுப்பினர்கள் கையெழுத்து செய்வார்கள் என்றால் சரிதான். அது போல் அப்துல்ரசாக் என்பவர் பல தீர்மானங்களில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். 06.06.1999, 18.03.2000, 12.12.2000 ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் அப்துல்ரசாக் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த தீர்மான புத்தகத்தின் உண்மை நகல்கள் முறையே **சா.சா.ஆ 4**, **சா.சா.ஆ 5**, **சா.சா.ஆ 6.** அப்துல்ரசாக் என்பவர் அப்துல்லாவின் தந்தை, பாத்திமா பீவியின் மாமனார்.

<u>1, 6, 8, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இதற்கு முன்பு சிக்கந்தர் பாதுஷா வகையறா மீது பாத்திமா பீவி கொடுத்த குற்ற வழக்கில் கனம் அருப்புக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அ.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பெயிண்டராக வேலை பார்த்ததாக சொல்லியுள்ளேன். அ.சா.1 பாத்திமா பீவி எனது உறவினர் ஆவார் என்றும் சொல்லியுள்ளேன். அந்த குற்ற வழக்கில் பாத்திமா பீவிக்கு ஒத்தாசையாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்க உடன் சென்றேன் என்றால் நடந்த உண்மையை சொல்லச் சென்றேன். அந்த குற்ற வழக்கில் சிக்கந்தர் பாதுஷா தரப்பினர் குற்றவாளிகள் அல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி குற்ற வழக்கில் ஒவ்வொரு வாய்தாவிற்கும் வருவேன் என்றும், அதை தெரிந்து தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையெழுத்து தலைவர் A.சும்சுதீன் உடையது. அவரது கையெழுத்துக்கு கீழே உள்ள முத்திரையில் தலைவர் என்று குறிப்பிடப்படவில்லை என்றும், நல்லூர் முகைதீன் ஆண்டவர் பள்ளி வாசல், அருப்புக்கோட்டை என்று உள்ளது என்றால் சரிதான். தலைவருக்கு என்று தனியாக முத்திரை கிடையாது. செக்கரரிட்டிக்கு மட்டும்

தான் முத்திரை உள்ளது. இந்த வழக்கில் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க மற்றும் ஆவணங்களை கொண்டு செல்ல தலைவர் சம்சுதீன் அனுமதி கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தலைவர் சொன்னத்தின் பேரில் தான் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். இந்த வழக்கில் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க மற்றும் ஆவணங்களை கொண்டு செல்ல தலைவர் சம்சுதீன் அனுமதி எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் யாருக்கும் தெரியாமல் நான் எடுத்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ 3 ஆவணத்தில் கீழ் பகுதியில் மணமகன், மணமகள் பற்றிய விபரங்கள் இளஞ்சிவப்பு மையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது அசல் குறிப்பேட்டில் காணப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மணமகன் மற்றும் மணமகளுக்கு திருமணம் நடந்துள்ளது என்பதை காட்டுவதற்காக மேற்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது. நான் கொண்டுவந்துள்ள அசல் திருமண பதிவேட்டில் மற்ற மணமகன், மணமகள் புகைபடங்கள் ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது ஜமாதைச் சேர்ந்தவர்களுக்கு புகைப்படம் ஒட்டுவது கிடையாது. வெளியூரில் இருந்து வரும் மணமகனுக்கு புகைப்படம் ஒட்டப்படும். திருமண அசல் பதிவேட்டில் திருமண பதிவிற்கான விதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணத்தில் உள்ள புகைப்படம் மற்றும் கையெழுத்து அப்துல்ரசாக்கிற்குரியது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ 1**. சா.சா.ஆ 3 ல் அப்துல்ரசாக் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. (சாட்சி மறுபடியும் பி.வா.சா.ஆ 1 ல் கையெழுத்தை பொறுத்து தனக்கு சந்தேகம் இருப்பதாக சொல்கிறார்). நல்லூர் முகைதீன் ஆண்டவர் ஜீம்மா பள்ளி வாசல் என்ற அமைப்பு சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நல்லூர் முஸ்லீம் உறவின்முறை பொது ஸ்தாபனம் என்ற அமைப்பிற்கு எந்தவித நீதிமன்ற அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியதால்

தான் நான் வந்துள்ளேன். சா.சா.ஆ 3 முதல் சா.சா.ஆ 6 வரையான ஆவணங்களான தீர்மானங்களில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் உறுப்பினர் இல்லை. சா.சா.ஆ 3 முதல் சா.சா.ஆ 6 வரையான ஆவணங்களில் அப்துல்ரசாக் கையெழுத்து செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையிலேயே சாட்சியம் அளிக்கிறேன். நான் பாத்திமா பீவிக்கு மச்சான் முறை என்றால் சரியல்ல. அண்ணன் முறை. பாத்திமா பீவிக்கு இந்த வழக்கை நடத்துவதற்கு உதவியாக எல்லா விதத்திலும் ஆலோசனை கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் நல்லூர் முகைதீன் ஆண்டவர் ஜீம்மா பள்ளி வாசலில் நிர்வாக குழு உறுப்பினர் இல்லை என்றால் சரியல்ல. நான் வாதியின் உறவினர் என்ற முறையில் அவருக்கு உதவி செய்வதற்காக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது சாட்சியம் முறையான அனுமதியின் பேரில் சொல்லாததால் அது ஏற்றுக்கொள்ளகூடியது அல்ல என்றால் சரியல்ல.

<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சாட்சியம் அளிக்க எனது தலைவரிடம் இருந்து எந்த ஒரு அனுமதி கடிதமும் வாங்கிவரவில்லை என்றால் சரிதான். நான் பள்ளி வாசலில் நிர்வாகதஸ்தர் என்ற பதவியில் இருந்து வருகிறேன். எந்த ஆண்டு என்னை நிர்வாகதஸ்தராக வக்பு வாரியம் நியமித்தது என்றால் 2019 ல் என்னை நியமனம் செய்தார்கள். என்னை வக்பு வாரியத்தில் நிர்வாகதஸ்தராக நியமித்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அது சம்பந்தப்பட்ட ஆவணம் என்னிடம் உள்ளது. எனக்கு இஸ்லாமிய சட்டம் தெரியும். இஸ்லாமிய சட்டத்தின் படி முதல் மனைவி உயிரோடு இருக்கும் போது 4 திருமணம் செய்து கொள்ள உரிமை உள்ளது என்றால் முதல் மனைவியின் ஒப்புதலுடன் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளலாம். இஸ்லாமிய பெண்ணிற்கு சட்டப்படி விவாகரத்து செய்யாமல் இரண்டாவது

திருமணம் செய்ய முடியாது என்றால் சரிதான். அவ்வாறு விவாகரத்து செய்யாமல் திருமணம் செய்தால் அது சட்டப்படி செல்லாது. இஸ்லாமிய சட்டப்படி விவாகரத்து பெறுவது என்றால் ஒவ்வொரு மாதமும், தலாக் கடிதம் சம்மந்தப்பட்ட மனைவிக்கும், பள்ளி வாசலுக்கும் 3 முறை அனுப்பப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பப்படும் தலாக் கடிதங்கள் பள்ளி வாசலில் முறையாக பராமரிக்கப்படும் என்றும், அதற்கென தனியாக பதிவேடுகள் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ட பாத்திமா பீவிக்கும், அப்துல்ரஜாக் என்பவருக்கும் 20.06.1993 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அது எங்கள் பள்ளி வாசலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்துல்ரஜாக் வாய் பேசமுடியாதவர் என்றால் சரிதான். அப்துல்ரஜாக் மூலம் 2ம் வாதி பாத்திமா பீவிக்கு ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். அப்துல்ரஜாக்கிற்கும், பாத்திமா பீவிக்கும் விவாகரத்து நடந்தது சம்பந்தமாக எங்கள் பள்ளி வாசலில் எந்தவித ஆவணமும் கிடையாது என்றால் சரியல்ல ஆவணம் உள்ளது. தலாக் சம்மந்தமான கடிதங்கள் எந்த எந்த தேதிகளில் பள்ளி வாசல் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆனால் பள்ளி வாசல் பதிவேடுகளில் உள்ளது. அப்துல்ரஜாக், 2ம் வாதி பாத்திமா பீவியை சட்டப்படியான விவாகரத்து எந்த காலத்திலும் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. முதல் திருமணம் ஊர்ஜிதத்தில் உள்ள போது இரண்டாவதாக 1ம் வாதி அப்துல்லாவுடன் செய்ததாக சொல்லப்படும் திருமணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சா.சா.ஆ 3 முதல் சா.சா.ஆ 6 வரையான ஆவணங்களில் உள்ள கையெழுத்து அப்துல்ரசாக்கின் கையெழுத்து கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் தயார் செய்யப்படும் காலத்தில் நான் நிர்வாகத்தில் எந்தவித பதவியிலும் இருந்தது கிடையாது என்றால் சரிதான். அதனால் யார், யார் கையெழுத்து போட்டார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் இந்த நீதிமன்றத்தில் நிறைய வழக்குகளில் சாட்சியம்

அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் பள்ளி வாசலில் எந்த பதவியிலும் கிடையாது என்றால் சரியல்ல. பள்ளி வாசலில் உள்ள தலைவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் பள்ளி வாசலில் உள்ள ஆவணங்களை கொண்டு வந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிர்வாகத்தில் ஒரு தரப்பினராக இல்லாததால் தான் எனக்கு தலைவர் அனுமதி கடிதம் வழங்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.